# பாசிக்குடா பிரதேசத்தில் சுற்றுலாத்துறை அபிவிருத்தி

**தவப்பிரபா என், பொன்னையா எஸ்**

இன்றைய கால கட்டத்தில் துரிதமாக வளர்ச்சியடைந்து வரும் துறைகளில் ஒன்றாக நாடுகளின் அதிக வருமானத்தை ஈட்டித்தரும் துறைகளில் பிரதான இடத்தை வகி துறையாகவும் சுற்றுலாத்துறை விளங்குகின்றது. இலங்கை ஒரு வனப்புமிக்க வரலா சிறப்பைப் பெற்ற நாடாக காட்சியளிப்பதால் இங்கு உல்லாசப் பயணிகளின் ஈர்ப்பு கூடுதல காணப்படுகின்றது. குறிப்பாக இலங்கையின் கரையோரங்கள் அழகிய குடாக்களை களப்புக்களையும் கொண்டு காணப்படுவது உல்லாச பயணத்துறையின் வளர்ச் சாதகமாக அமைகின்றது. மட்டக்களப்பு மாவட்டத்தில் பிரசித்தி பெற்ற குடாவாக பாசிக் விளங்குகின்றது. வரலாற்றுச் சிறப்புடன் விளங்கும் பாசிக்குடாவின் சுற்றுலாத்துறை வளர்ச்சியை மேம்படுத்துவதற்கான சாத்தியப்பாடுகளைக் கண்டறிவதும் அவசியமானது

பாசிக்குடா மட்டக்களப்பிற்கு வடக்கே 28Km தொலைவில் அமைந்திருக்கும் முரு கற்பாறைகளைக் கொண்ட அமைதியான அலையடிப்பு குறைந்த குடாவாகும். வெளிநாட்டு, உள்நாட்டு உல்லாசப் பயணிகளைக் கவர்வதில் முக்கியத்துவம் வா விளங்குகின்றது. கடந்த காலங்களில் நாட்டில் ஏற்பட்ட அசாதாரண சூழ்நிலை காரணமா 2004 ஆம் ஆண்டில் ஏற்பட்ட சுனாமி அனர்த்தம் காரணமாகவும் இப்பிரதேசத்தின் சூழல் பாதிக்கப்பட்டதுடன் உல்லாசத்துறையிலும் வீழ்ச்சியைக் கண்டிருந்தது. பாசிக் பிரதேசத்தில் சுற்றுலாத்துறையை வளப்படுத்தக்கூடிய சாத்தியப் பாட்டினைக் கண்டறி நோக்கமாகக் கொண்டு இந்த ஆய்விற்கான தரவுகள் வெளிக்களத் திற்கு நேரடி சென்று அங்கு வருகைதரும் உள்நாட்டு, வெளிநாட்டு உல்லாச பயணிகளுடனும், ஹோ உரிமையாளர்களுடனும் நேரடியாகக் கலந்துரையாடு வதன் மூலமும் அவதான மூலமும், மாதிரி வினாக்கொத்துக்கள் மூலமாகவும் பெற்றுக் கொள்ளப்பட்டன. அத் புள்ளிவிபர குறிப்பேடுகள் மூலமும் தரவுகளும் தகவல்களும் பெற்றுக் கொள்ளப்ப

எனவே இவ் அழகிய சுற்றுலாத் தலத்தினை அபிவிருத்தி செய்வதன் மூலம் சுபீட் எழில் மிக்க உல்லாசப் பயணிகளின் பால் ஈர்ப்புக் கொள்ளக்கூடிய வகையில் முகாமை கூடிய தந்திரோபாயங்களை உபயோகித்து நீண்டகால வலைப்பின்னல் அமைப்புக்கெ செயற்திட்டங்களை முன்வைப்பது இவ் ஆய்வின் பின்னணியாகும்.

உல்லாசப் பயணிகளை மீண்டும் கவரக்கூடிய வகையில் புனருத்தாரண நடவடிக்க ஈடுபடுவதனூடாக இப்பிரதேச சமூகத்திற்கு வேலைவாய்ப்பு, சுயதொழில் வா இனத்துவேசமற்ற நிலைப்பாடு, கலாச்சார முன்னேற்ற நடவடிக்கைகள், அடிப்படைத் தே பூர்த்தி என்பவை மீண்டும் கட்டியெழுப்படும். இவற்றினூடாக சமூக மற்றும் பொரு வசதிகளை ஏற்படுத்துவதுடன் பிரதேச அபிவிருத்தியினையும் மேற்கொள்ள முடியு

**திறவுச் சொற்கள்** : சுற்றுலாத்துறை, பாசிக்குடா, அபிவிருத்தி

[1] *Department of Geography, Eastern University, Sri Lanka. email:spko30@yahoo.com*